
R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
August 2020



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
புதிய வெளியீடு
ரேடியோ மற்றும் தொலைக்காட்சியில்
வெளிவந்த தேவ செய்திகள்
அடங்கிய Vol.6
தேவைப்படுவோர்
கீழ்கண்ட முகவரிக்கு
எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்



All Books
Just
Rs300/-

Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

Every Tuesday 6.00 P.M on Tamilan TV &
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA





Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press, 14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 20 ஆகஸ்ட் 2020 கனி 9



THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்;
அவைகளால் உங்களுக்கு
நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச்
சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39


**பாடம் : 9**

**தலைப்பு : தகன பலி – Burnt offering**

**வேத வாசிப்பு : யோபு 1:1-5**


> நான் அதிகமாக அறியவில்லை
> ஆனால்
> மூன்று காரியங்களை அறிவேன்:
> தேவன் ஒருவர் இருக்கிறார்,
> அவருடைய வார்த்தை
> உண்மையுள்ளது,
> அவரோடு நெருக்கமாயிரு
> அவர் உன்னை
> முழுவதும் பார்த்துக்கொள்வார் !
> ஆமென். -Betty

1. நோவா கர்த்தருக்கு - ஆதி.8:20-22
2. ஈசாக்கை தகனபலியாக - ஆதி.22:2-8,13
3. போஜனபலியாகிய தகனபலி - லேவி.2:9-11
4. பானபலியான தகனபலி - எண்.15:10
5. தாவீது 1000 காளை,1000 ஆடு - 1நாளா.29:2
6. யோபு தன் பிள்ளைகளுக்காக - யோபு 1:5
7. உங்கள் பலிகளின்மேல் பிரியமில்லை - ஏசா.43:23
8. உன் பலிகளின் நிணத்தினால் என்னை - ஏசா.43:24
9. தகனபலிகளைப் பார்கிலும் தேவனை - ஓசி.6:6
10. கர்த்தர் என்னத்தைக் கேட்கிறார் - மீகா 6:6-8




**the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்**
**YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்**
YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509




**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 240

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவனைச் சத்துருவாக எண்ணாமல் எப்படிப்பட்டவனாக எண்ணி, அவனுக்குப்புத்தி சொல்லவேண்டும்?
2. சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ எப்படியிருக்கும்?
3. எவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள் ?
4. எல்லாவற்றையும் ஞானத்தினாலே சோதித்துப்பார்த்தேன்; நான் ஞானவானாவேன் என்றேன் அது எனக்கு என்னவாயிற்று?
5. நீ கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு என யார் எழுதியது?
6. எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடம் எதனால் மிதித்துப் போடப்படும்?
7. குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக என யாருக்கு எழுதப்பட்டது?
8. தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள் இப்படியிருப்பது எவர்களுக்குப் பிரியமாயிருக்கிறது என கர்த்தர் சொல்லுகிறார்?
9. மாற்கு பவுலின் உடன்வேலையாளா?
10. தேவரீர் என்றைக்கும் எங்களை மறந்து, நெடுங்காலமாக எங்களைக் கைவிட்டிருப்பதென்ன? என புலம்பும் தீர்க்கன் யார்?

## வேதாகம ஆய்வு... 25

## ஆரோன்- Aaron



1. உயர்வு – கி.மு 1573
2. தேவன் ஆரோனை மோசேக்கு வாயாயிருக்கும்படி ஏற்படுத்தினார்.
3. ஆரோனின் கோல் துளிர்த்தது – யாத்.17:8, எபி.9:4
4. ஆரோன் மரித்தபோது 123 வயதாயிருந்தான் – யாத்.33:39
5. ஊழிய அழைப்புக்கு எபிரெய ஆசான் ஆரோனை உதாரணப்படுத்துகிறார் – எபி.5:4

சிறுவர் பகுதி

## பூமியிலிருந்து அகற்றவேண்டும்

வேத பகுதி: அப்போஸ்தலர்22:17-22



**அ**ப்போஸ்தலனாகிய பவுலை அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவர்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் அவனை பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள். சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சுய ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து அவரைக் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் துரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்துபயன்படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். பவுல் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறார். அவர் காலதாமதம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றார். இந்தப்பவுலைப்போல நீங்களும் கர்த்தருக்கு எதிர்காலத்தில் ஊழியம் செய்வீர்களா?

**மனப்பாட வசனம்**

**“தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (லூக்கா4:24)**

**நடப்புச்செய்திகள்**

- ❒ உலக அதிசயங்களில் ஒன்றான பாரிஸில் உள்ள ஈஃபிள் டவர் 3 மாதங்களுக்கு பிறகு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.
- ❒ இந்திய செஞ்சிலுவைச் சங்கம் உருவாக்கியுள்ள ‘மின்னணு ரத்த சேவைகள்’ கைபேசிச் செயலி துவக்கப்பட்டுள்ளது
- ❒ ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கோவையில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன



திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 20 ஆகஸ்ட் -2020 கனி - 9

**ஆசிரியருரை**

## பாக்கியவான்கள்
## Blessed




"**உ**ம்மிலே பெலன்கொள்ளுகிறமனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்" என சங்.84:5-ல் வாசிக்கிறோம். ஆம், தேவனில் பெலன்கொள்ளும்போது நாம் பாக்கியவான்களாவோம். சுயபெலத்தை நம்பி ஏமாற்றம் அடைந்தோர் ஏராளம். தேவன் ஒருவனைப் பெலப்படுத்த வேண்டும் அல்லது அவருடைய வசனம் ஒருவனைப் பெலப்படுத்தவேண்டும் அப்பொழுது மெய்யான பெலத்தை மனிதன் பெற்றுக்கொள்ளுவான். சிலர் பொதுவாக எப்படியிருக்கிறீர்கள் என்று கேட்டால் ஏதோ இருக்கிறோம் என்பார்கள், இன்னும் சிலர் இருக்கிறோம் என்பார்கள். தேவனுடைய மனுஷனைக்கேட்டால் கர்த்தருடைய கிருபையால் அல்லது அவருடைய பெலத்தால் சுகமாக இருக்கிறோம் என்பான். உண்மையிலே ஒருவனை பெலப்படுத்துவது கர்த்தருடைய வசனம். தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம். அதைப்போல கர்த்தருடைய வசனம் விடாய்த்த ஆத்துமாவுக்கு குளிர்ந்த தண்ணீர்போல இருக்கும்.

கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்பிவிக்கிறதற்காக கோதுமையை ஆலைக்குச் சமீபமாய் அதைப்போரடித்தான். "கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி; பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப்பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்" (நியா.6:12-14). இந்த கிதியோனைப்போல சில வேளைகளில் நாம் தேவன் நம்மை கைவிட்டாரோ என்று நினைக்கின்றோம். தேவன் தெரிந்துகொண்டவர்களை ஒருபோதும் கைவிடார். உலர்ந்த எழும்புகளுக்கு உயிர்கொடுக்கும் தேவன் நம்தேவன் என்பதை மறந்துபோகாதிருங்கள். சோர்ந்துபோய் கோதுமையை போரடித்துக்கொண்டிருந்த கிதியோனை கர்த்தர் சந்தித்து உனக்கு இருக்கிற இந்தப்பலத்தோடே போ என்றார். போனவன் வெற்றியடைந்தானா? ஆம், தண்ணீரை நக்கிக்குடித்த முந்நூறுபேராலே நான் உங்களை இரட்சித்து, மீதியானியரை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார்

கர்த்தர், அந்தப்படியாக கிதியோன் மீதியானியரை மேற்கொண்டான். பெலனற்றுப்போன கிதியோன் கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு பெலன்கொண்டான்.

அதைப்போல அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார்; "என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்" என்றார் (1தீமோ.1:12). பவுல் சவுலாக இருந்த நாட்களிலே கர்த்தருடைய மார்க்கத்திற்கு விரோதமாக அநேகரை கட்டி சிறைச்சாலையில் போட்டு உபத்திரவப்படுத்தினவன். அவனை கர்த்தர் சந்தித்து தம்முடைய ஊழியத்தில் வல்லமையுள்ள ஒரு அப்போஸ்தலனாக எடுத்து பயன்படுத்தினார். பவுல் சுய ஞானத்தினாலோ அல்லது அவருடைய பெலத்தினாலோ இந்த ஊழியத்திற்கு வரவில்லை. அவரை பலப்படுத்திய கர்த்தரைக்குறித்து சொல்லுகிறார். 'என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினார்' என்கிறார். அன்பானவர்களே, கர்த்தர் உண்மையுள்ளவர். ஆகையால் அவர் உண்மையுள்ளவர்களை அவருடைய ஊழியத்திற்காக தெரிந்துகொள்ளுகிறார். நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருப்பீர்களானால் உங்களையும் தேவன் பலப்படுத்தி அவருடைய ஊழியத்திற்கு தெரிந்துகொள்ளுவார். ஆரோனைப்போல அழைக்கப்படாவிட்டால் ஒருவனும் இந்த கனமான ஊழியத்தை செய்யமுடியாது எனக் காண்கிறோம்.

தாவீது இப்படியாக சொல்லுகிறார்; "எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்" (சங்.90:10). மனிதன் தன்னுடைய பெலத்தைவைத்து நான் அதைச்செய்வேன் இதைச்செய்வேன் என்பான். அவனுடைய வயது அதிகரிக்க அதிகரிக்க அவனுடைய பெலன் குறைந்து போவதையும் அவனுடைய நினைவாற்றல் குறைந்துபோவதையும் அவனால் அறியமுடியும். இதையே தாவீது எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம் பெலத்தின் மிகுதியால் சிலர் எண்பது வருஷம் உயிரோடிருக்கிறார்கள். தாவீதின் நாட்களிலே இதை சொல்லி இருக்கிறார் என்றால் நாம் வாழும் இந்நாட்களில் சொல்லவேண்டிய அவசியமில்லை அவ்வளவு குறைவாகவே மனிதன் தன்னுடைய பெலத்தை இழந்து சீக்கிரமே மரணத்தை சந்திக்கிறான். ஒருவேளை சிலர் அதிக நாட்கள் வாழுகிறார்கள் அவர்களுடைய நிலமை வருத்தமும் சஞ்சலமுமே எனக்காண்கிறோம். அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. பக்கத்தில் இருக்கும் ஒரு பொருளை எடுக்கமுடியாது யாருடைய உதவியையாவது நாடவேண்டி இருக்கும். இது அவர்களுடைய வாழ்க்கையில் சஞ்சலத்தைக் கொண்டுவரும். ஆனால் தேவனுடைய பெலத்தினால் உன் ஆயுசுசின் வருஷங்கள் கூடுமானால், நீ பாக்கியவானாயிருப்பாய்.

யோபு சொல்லுகிறார்; "பெலத்தைப் பார்த்தால், அவரே பெலத்தவர்; நியாயத்தைப் பார்த்தால், என் பட்சத்தில் சாட்சி சொல்லுகிறவன் யார்? என்கிறார் (யோபு 9:19). தேவனுக்கு நிகராக யார் நிலைநிற்கமுடியும். அவர் ஞானத்தில் சிறந்தவர் பெலத்தில் பெரியவர். அவருக்கு முன்னும் பின்னும் யாரும் நிற்கமுடியாது. அவர் அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தர் என்றெல்லாம் பார்க்கிறோம். இந்த வசனத்தை சொல்லும் யோபு; ஒரு நீதிமான், சன்மார்க்கன், தேவனால் நற்சாட்சி பெற்றவன். அவனைப்போல ஒருவனும் பூமியில் இல்லை.



**வேதகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**
**ஆம் எனில் ☑ குறியிடவும்**



**தற்சோதனை பகுதி - 23**

**23. கள்ளப்போதகர்களை நாம் எப்படி அடையாளம் கண்டுகொள்வது?**

1. கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணுவார்கள் ☐ வசன ஆதாரம் ---------------------------
2. அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படாது ☐ வசன ஆதாரம் -
----------------------------------------------------------------
3. அவர்கள் ஆட்டுக்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் ☐ வசன ஆதாரம் ----------------------------------------
4. பூர்வத்திலே இவர்களைப்பற்றி எழுதவில்லை ☐ வசன ஆதாரம் -
----------------------------------------------------------------
5. இப்படிப்பட்டவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருக்க வேண்டும் ☐ வசன ஆதாரம் ------------------------------------------
6. இப்படிப்பட்டவனுக்கு வாழ்த்துதல் சொல்லுவதால் ஒன்றுமில்லை ☐ வசன ஆதாரம்-------------------------------------------------
7. உலகத்திலே அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருக்கிறார்கள் ☐ வசன ஆதாரம்---------------------------
8. அவர்களுடைய வார்த்தை ஒன்றும் அரிபிளவைப்போலப் படறாது ☐ வசன ஆதாரம்------------------------------------------
9. உறுதியில்லாத ஆத்துமாக்களை தந்திரமாக பிடிக்கக் கூடியவர்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------------------
10. சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சிக்கமுடிவில்லை ☐ வசன ஆதாரம் ---------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
Contact Us: 94435 58041

பாருங்கள், எலிசபெத்து மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டபொழுது, அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்தசத்தமாய்; ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்'' (லூக்.1:41-45). ஒருவருக்கொருவர் எப்படி வாழ்த்திக்கொள்ளுகிறார்கள்! முதிர்வயதாகிய எலிசபெத்து இளையவளாகிய மரியாளை என் ஆண்டவருடைய தாயார் என்றும், பாக்கியவதி என்றும் சொல்லி வாழ்த்துகிறாள். மூத்தவளாகிய தனக்கு இந்த பாக்கியம் கிடைக்கவில்லையே, நாமும் தானே கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தோம் (வச.6) என்று பொறாமைப்படவில்லை. 'அன்புக்குப் பொறாமையில்லை' என்ற வசனத்திற்கேற்ப இருவரும் மாறி மாறி வாழ்த்துவதோடுகூட தேவனையும் மகிமைப்படுத்துகிறார்கள். அது மாத்திரமல்ல, ''மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் அவளுடனே இருந்து, தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்'' (வச.56) என்று வாசிக்கிறோம். அப்படியானால் கர்ப்பந்தரித்திருக்கிற எலிசபெத்துக்கு மூன்றுமாதம் உதவியாக இருந்திருக்கிறாள். அப்படி உதவியாகயிருந்த நாட்களில் தேவனைக் குறித்தும், அவருடைய மகத்துவங்களைக் குறித்தும் பேசி, தேவனை மகிமைப்படுத்தியிருக்கிறாள். ''என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.... வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது..... தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்;'' (வச.46-54) என்றெல்லாம் சொல்லி தேவனைத் துதித்து மகிமைப்படுத்துகிறாள்.

அன்பு சகோதரிகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற உங்கள் சகோதரிகள் யாரையாவது கண்டால் இவ்வாறு கர்த்தருக்கடுத்த காரியங்களைப் பற்றி பேசுகிறீர்களா? அல்லது உலகக் காரியங்களையும், வீணான பேச்சுகளையும் பேசி ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறீர்களா? காலஞ் செல்லாததாயிருக்கிறபடியால் காலத்தைப்பயன்படுத்திக் கொள்வோம், கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காவும், நம்முடைய சகோதரிகளுக்குச் செய்த நன்மைகளுக்காவும் ஒருமித்தவர்களாயிருந்து கர்த்தரை மகிமைப்படுத்துவோம். கர்த்தருடைய மகத்துவங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு ஒருவரை ஒருவர் ஆவிக்குரிய ஜீவியத்தில் தாங்கி பலப்படுத்துவோம். அநேக நேரங்களில் ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறவர்கள் கூட சோதனை நேரங்களில் சோர்ந்து போய்விடுகின்றனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நம்முடைய சகோதரிகளிடம் கர்த்தருடைய மகத்துவங்களையும் அன்பையும் சொல்லி ஸ்திரப்படுத்துவோம். கர்த்தர் நம்முடைய அன்பு சகோதரிகளுக்குச் செய்யும் நன்மையான காரியங்களுக்காக ஒருமனதோடுகூட கர்த்தரை மகிமைப்படுத்துவோம். சகோதரிகள் ஒருமித்து வாசம் பண்ணும்போது நன்மையும் இன்பமும் சூழ்ந்துகொள்ளும். இருதயங்களை ஆராய்ந்து அறிகிற கர்த்தருக்கு முன்பாக நம் இருதயம் செம்மையாக இருக்கட்டும். கர்த்தர் தம்முடைய நன்மையினாலும் இன்பத்தினாலும் நம்மை திருப்திப்படுத்துவாராக!



அவனைப்போல நாமும் தேவனுடைய பெலத்தில் நம்பிக்கை கொள்ளும்போது, யோவுவைப்போல ஆசீர்வதிக்கப்படுவோம்.

மேலும், அவரில் பெலன்கொள்ளுகிற மனுஷன் பாக்கியவனாயிருப்பதுபோல, தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள் எனக் காண்கிறோம். பழைய ஏற்பாட்டு காலத்தில் அவருடைய செவ்வையான வழிகளைக் கொண்டிருந்து ஆசீர்வதிக்கப்பட்டவர்களில் தாவீதும் ஒருவர். அவர் சொல்லும்போது; "தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்" (சங்.18:30). கரடு முரடான பாதைகளில் நடந்து தங்களுடைய வழி செம்மையாயிருக்கிறது என்கிறவர்களை நாம் அறிகிறோம். திருப்தியாக சாப்பிடாமல் திருப்தியாக இருக்கிறோம் என்று மற்றவர்களுக்காக சொல்லும் கூட்டத்தை காண்கிறோம். ஆனால் தாவீது கர்த்தருடைய வழிகளை ருசித்தவர். தேவன் அவருக்கு கேடகமாயிருந்தார். ஆகையால் அவரால் இவைகளை விவரித்துச் சொல்லமுடிகிறது. இளம் வயதில் ஆடுகளின் பின்னே சென்ற தாவீதை தேவன் அரசனாக்கினார். வாய்பேசாத ஆடுகளை வழிநடத்திய அந்த மனிதன் வாய்பேசும் தேவனுடைய ஜனங்களை சிறப்பாக 40 வருஷம் ஆண்டு தேவனுடைய ஆலோசனையின்படி அவர்களை வழிநடத்தினான். அவனுடைய நாட்களில் அவன் சவதரித்துவைத்த பொருட்களுக்கு அளவே இல்லை கணக்கில்லாத பொருட்களை கர்த்தருடைய பணிக்காக சம்பாதித்துவைத்தான். அவன் சொல்லுகிறான்; தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது அவரை நம்புகிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார். நீங்கள் அந்த தேவனை நம்புகிறீர்களா? அப்படி நம்புவீர்களானால் நீங்கள் செவ்வையான வழியை தெரிந்துகொண்டீர்கள். நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

தாவீதுக்கு பின்பு வந்த அரசன் அவனுடைய மகன் சாலொமோன்; அவன் சொல்லுகிறான், "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி.16:25). யார் சொன்னாலும் சரியாய் இருக்காது நான் சொன்னால் சரியாய் இருக்கும் என்று அநேகர் சொல்வதைக்கேட்டிருப்பீர்கள். சிலர் மனிதர்களை மேன்மைப்படுத்தி அவர் சொன்னால் சரியாய் இருக்கும் அவர்சொல்வதைக் கேட்போம் என்பார்கள். மேற்கண்ட வசனத்தை சொன்னவர் மகா ஞானவான். நன்கு அனுபவித்தவர். அவரைப்போல ஒருவரும் சாப்பிட்டிருக்க முடியாது, அவரைப்போல ஒருவரும் உடுத்தியிருக்க முடியாது, அவரைப்போல அரண்மனை வாழ்க்கையை அனுபவித்திருக்க முடியாது. அநேக நீதிமொழிகளை எழுதியவர். அவர் சொல்லுகிறார் மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள். ஆம், அந்த வழிகள் அவர்களுக்கு மிகவும் செம்மையாகத் தோன்றும் ஆனால் அதின் முடிவு மிகவும் முக்கியம். மரணத்திற்கு கொண்டுசெல்லும் வழியாக அது இருக்கிறது. பரவாயில்லை கொஞ்சநாட்களாவது நன்றாக இருக்கிறோமே கடைசியில் எது எப்படிபோனால் என்ன என்பார்கள். அன்பானவர்களே, எல்லாரும் சாகத்தானே போகிறோம். ஆகையால் நமக்கு இருக்கும் இந்த பிள்ளை இருந்து என்ன பயன் இன்றைக்கு கொன்றுபோடுவோம் என்று பெற்றோர்கள் குழந்தைகளை கொன்றுபோடுகிறார்களா? நாம் சிந்திக்கவேண்டும். மனிதர்களுடைய அறிவு குறைவுள்ளது. தேவன் சிறப்பான வழியை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். அவ்வழி செவ்வையான வழியாக

இருக்கிறது. அதைக் கண்டுகொள்ளுகிறவர்கள் சிலராகவே இருக்கிறார்கள். அதில் நீங்களும் ஒருவராக இருந்து அந்தவழியாக செல்ல முற்படுங்கள் அப்பொழுது பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

மேலும் சொல்லுகிறார்; "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" (நீதி.3:5,6). கெட்டுப்போன பிறகு அநேகருக்கு புத்திவருகிறது அல்லது புத்திதெளிவாகிறது. ஐயோ நான் அதை இப்படி செய்திருந்தால் நன்றாயிருக்கும் என்பார்கள். இதையே வேதம் உன் சுயபுத்தியின்மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு என போதிக்கிறது. சுய புத்திவேண்டும் அல்லது சொல்வார் புத்திவேண்டும் என்பார்கள். இரண்டுமே வேண்டாம் வேதத்திற்கு செவிகொடுத்து முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருங்கள். கர்த்தர் காரியங்களை வாய்க்கச்செய்வார். அதுமட்டுமல்ல உன் வழிகளெல்லாம் அவரை நினைக்கும்போது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார். தவறான பாதைகளில் நீங்கள் சென்றாலும் உங்களை சரியான பாதைக்கு கொண்டுவருவார். ஆகையால் தான் அநேக பாவிகள் கர்த்தருடைய மார்க்கத்தில் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார் என காண்கிறோம். ஏசாயா இப்படியாக சொல்லுகிறார்; "நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது; மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்" (ஏசா.26:7). நீதிமான் நீதியின்பாதையில் நடக்கிறான். அவனுடைய பாதை செம்மையாகவே இருக்கிறது. ஆனாலும் மகா நீதிபரராகிய கர்த்தர் அந்த நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறார் என்றால் அந்த நீதிமானுடைய வழி செம்மையாயிராதபடியால் அதை செம்மைப்படுத்துகிறார். தேவனுக்கு முன்பாக ஒருவனும் நீதிமான் அல்ல. நீங்கள் பாக்கியவான்களாக இருக்க கர்த்தரில் பெலன் கொள்ளுங்கள், உங்களுடைய இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**நாம் பாக்கியவான்களாக இருக்க நாம் யாருடைய மாதிரியை பின்தொடரவேண்டும்?**

அநேக மாதிரிகளை நாம் வேதத்தின் மூலமாக அறிகிறோம். நமக்கு பிரதான மாதிரியாக கொடுக்கப்பட்டவர் அன்பின் ஆண்டவர் இயேசு. அவரை அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்கு அடையாளப்படுத்துகிறார். "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" என்றார் (1பேது.2:21). எத்தனையோ தீர்க்கதரிசிகளைக் கொண்டு வழிநடத்திவந்த தேவன் கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக வெளிப்பட்டார். இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டும் உலகங்களை உண்டாக்கினார் என்றெல்லாம் வாசிக்கிறோம். இயேசுவானவர் தேவனில் பெலன்கொண்டவர். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரியத்திற்காகவும் தேவனை நோக்கி ஜெபித்தார். சுயமாக அவர் ஒன்றையும் செய்யவில்லை. அதைப்போல அவருடைய வழிகள் செவ்வையான வைகளாகவே இருந்தது. ஆகையால் அவருடைய அடிச்சுவடுகளை தொடர்ந்துவரும்படி நமக்கு மாதிரியை பின்வைத்துப்போயிருக்கிறார். அதைதொடருங்கள். ஜெபிக்கிறோம்.



பெண்கள் பகுதி

## எத்தனை நன்மை! எத்தனை இன்பம்!!

## How Good! How Pleasant!!

-Glory Arjunan



**எ**த்தனை நன்மை, எத்தனை இன்பம் சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணும் போது என்று சங்கீதக்காரனாகிய தாவீது 133-ம் சங்கீதம் 1-ம் வசனத்தில் மிக அழகாய் பாடியுள்ளார். அன்பு சகோதரிகளே, இந்த நன்மையும் இந்த இன்பமும் எப்போது வரும்? ஒருமித்து வாசம்பண்ணும் போது. ஏக சிந்தையுள்ளவர்கள் அதாவது ஒரே காரியத்தைக் குறித்த விருப்பமுள்ளவர்கள் தான் ஒருமித்து இருக்கமுடியும். இவ்விதமான ஒருமித்த சிந்தனை ஆவிக்குரிய அல்லது தேவனுக்கடுத்த சிந்தனையாயிருக்கும் போது நிச்சயமாகவே நன்மையும் இன்பமும் நம்மை சூழ்ந்து கொள்ளும். இத்தகைய சிந்தைகொண்டிருந்த இரு சகோதரிகளைக் குறித்து லூக்.1:36-56 வரை வாசிக்கலாம்.

மரியாளும் எலிசபெத்தும் ஒரே இனத்தைச்சேர்ந்தவர்கள். ஆனால் இவர்கள் தங்கள் இனம் ஜனத்தைக் குறித்த சம்பாஷனையில் ஈடுபடவில்லை. இனத்தைக் குறித்த பெருமைகளையோ அல்லது வேறு எந்த உலகப்பிரகாரமான காரியத்தை பற்றியோ சம்பாஷிக்கவில்லை மாறாக இருவரும் தேவபக்தியுள்ளவர்களாய் தேவனையே புகழ்ந்து பேசிக் கொண்டிருந்ததை இவ்வசனங்களில் வாசிக்கிறோம். தேவதூதனால் அறிவிக்கப்பட்டபடி தன் இனத்தாளாகிய எலிசபெத்து தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள் எனக் கேள்விப்பட்டு யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் (எலிசபெத்தின் கணவன்) வீட்டிற்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள் என வாசிக்கிறோம். எப்பேர்பட்ட அன்பு! முதிர்வயதாகி மலடியாயிருந்த எலிசபெத்தைக் கர்த்தர் கடாட்சித்துள்ளார் என்று கேள்விபட்டு தீவிரமாய் போய் அவளை வாழ்த்தியிருக்கிறாள். அன்பு சகோதரியே, சற்றே இக்காலத்து சகோதரிகளைக் குறித்து சிந்தித்துப்பார்ப்போம். இன்றைய நாட்களில் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறேன் எனச் சொல்லிக் கொள்ளுகிற சகோதரிகள் கூட கர்த்தர் மற்றவர்களுக்கு அருளிச் செய்யும் ஆசீர்வாதங்களைக் குறித்து பொறாமைப்படுகின்றனர். பொறுக்க அவர்களுக்கு மனதில்லாது போகிறது. பவுலுங்கூட 'என் இனத்தானாகிய ஏரோதியோளை வாழ்த்துங்கள்' என்று ரோமர்16:11-ல் எழுதுகிறார். ஆனால் அநேகர் இனத்தாரையும் வாழ்த்துவதில்லை கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற சகோதரிகளையும் வாழ்த்துவதில்லை. அநேகர் மற்றவர்கள் வாழ பொறுக்காதவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் கர்த்தர், "எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருக்கிறேன்" என்கிறார் (ரோமர்9:18) அப்படியிருக்க கிறிஸ்துவுக்குள் ஏக சிந்தையாயிருக்கிற யாவரும் நம் சகேதாதரிகளிடத்தில் உண்மையான அன்புகூரக்கடவோம். நம் இனம், ஜனம் என்று சொல்லி சுயநலமாய் வாழாமல் கிறிஸ்து, யார் எனக்கு சகோதரர்கள், யார் எனக்குத் தாயார், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மத்.12:50) இந்த சிந்தை நமக்குள்ளும் இருக்கட்டும்.

முடிவில்லா உயிரினங்களின் சிருஷ்டிப்பினையும் அன்பு கூரும் திறனையும் அந்த அன்பினை தம்மிடமாகத் திரும்பவும் இழுத்துக் கொள்ளவும் திட்டமிட்டார்.

அங்கே வெறுமை இருந்தது, இருந்தபோதிலும் பரந்து விரிந்த வெற்றிடமும் முடிவில்லாத காலமும் ஏலோகிமின் உன்னதமாக பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டிருந்தது. அசைவற்ற நிசப்தமான, ஒரு இரக்க உணர்வைத் தூண்டுகிற நிலை காத்திருக்கின்றன...

தேவன் பேசினார்: "நாங்கள் துவக்கமில்லாதவர்கள், முடிவுமில்லாதவர்கள். ஆனால் மாறாத நித்தியமாக இருக்கக் கூடியவர்கள், எங்களுடைய முதன்மையான இயல்பு அன்பு. காரண காரியங்கள் அடிப்படையில் சிந்தித்து முடிவு எடுக்க, நாங்கள் எங்களுடைய அன்பை உணர்ந்து பதிலளிக்கும் வண்ணம் எங்களிடத்தில அன்பு கூரும் திறனுடனும் எங்களுடைய தத்ரூபமான சாயலில் மனிதவர்க்கத்தை உண்டாக்க வல்லமையுடைய வர்கள். அவர்கள் நித்தியமாக இருக்க மாட்டார்கள், ஆனால் நாங்கள் அவர்களுக்கு முடிவில்லாத - வாழ்வினைப் பரிசளிக்க முடியும் - எனவே ஒருமுறை நாங்கள் அவர்களை வாழும் நிலைக்குள் கொண்டுவருகையில் அவர்கள் ஒருபோதும் மரிக்கமாட்டார்கள். மேலும் நாங்கள் அவர்கள் பலுகிப் பெருகவும் அதனாலே அவர்கள் எங்களை மட்டும் நேசிக்கிறவர்களாயிராமல் அவர்களுடைய சந்ததியினரை நேசித்து அவர்கள் அவர்களுடைய சந்ததியின் அன்பினை பெற்று வாழக்கூடிய திறன் பெற்றவர்களாயிருக்கும் திறமையையும் அவர்களுக்குக் கொடுக்க முடியும்! இது ஒரு நேர்த்தியான வாழ்க்கை சுழற்சியாகவும் **நமக்குள்ளும் அவர்களுக்குள்ளும்** அன்புகூரும் செயலாகவும் இருக்கும்!

"ஆனால், கர்த்திருங்கள்!" வார்த்தை மேலும் பேசினார். "நான் காண்கிறேன் திகில்! ஆவிகளுக்குள்ளே நாங்கள் மனித வர்க்கங்களுக்கு உதவிட செய்வோம், அங்கே ஆட்சிகளுக்கு எதிரான வன்முறைகள் இருக்கும், கிளர்ச்சியாளர்களால் பரலோகத்தில் போர் மூளும். அதன்பின் மனிதன் எங்களுக்குக் கீழ்ப்படியாதபடி சோதிக்கப்படுவான், இவைகள் மனிதவர்க்கத்திற்குப் பாவத்தைக் கொண்டுவரும். நாங்கள் உண்டாக்கினதை இழந்துவிடுவோம் அவர்களே **எங்களிடம்** மீண்டும் திரும்புவதற்கு வழியற்றவர்களாய் இருப்பார்கள்!"

"ஆம், ஆவிக்குரிய மரணத்தில் கீழ்ப்படியாமையும் பாவமும் எங்களிடமிருந்து அவர்களைப் பிரித்துவிடும், பின்பு அவர்கள் உதவியற்றவர்களாவார்கள்..."

**அமைதி**

"அங்கே வழி உண்டு", வார்த்தையானவர் மெல்லிய சப்தத்துடன் சொன்னார். "பாவமில்லாத ஒருவர் மனித உலகத்தில் பிறப்பார், பின்பு அவர்களுடைய பாவங்களை தாம் ஏற்றுக்கொண்டு அவர்களுடைய இடத்தில் மரிப்பார்....


**அமைதி**

"நான் அதைச் செய்வேன்", வார்த்தையானவர் சொன்னார். "எனக்காக அவமானம் வைக்கப்பட்டிருக்கும் அவமானத்தைக் காட்டிலும் நமது அன்பைப் பகிர்ந்து கொள்ளும் சந்தோஷமும் அநேக சகோதரர்களோடும் சகோதரிகளோடும் நித்திய நித்தியமான மகிமையும் பெரிதாக இருக்கும்... நான் அதைச் செய்வேன் என்றார்.

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா.1:14).

VI. பழைய ஏற்பாட்டினை வாசிக்கும்போது வேதவாக்கியங்களை ஆழ்ந்து வாசித்தால் நாம் ஏற்கனவே பலதடவை கவனித்திருக்கிறோம், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராக செயல்படுகிற **வார்த்தை** ஆனவர் தேவதூதனாகிய நபராக அடையாளப்படுத்தப்படுகிறார். அவர் பேசின போதெல்லாம் அதிகாரமுடையவராகவும் கர்த்தராகிய தேவனுடைய வல்லமையாகவும் பேசினார், எனவே தான் **தேவத்துவத்திலுள்ள நபர்களுடைய** சமநிலையில் வேறுபாடு இல்லை.





## கிறிஸ்துவை பிரசங்கியுங்கள் ஆனால் சபையை அல்ல

## Preach Christ, but Not the Church

*-J.C.Choate*

மக்கள் அடிக்கடி "நான் சபையில் ஆர்வமுடையவனாக இல்லை - ஒழுங்கு படுத்தப்பட்ட மார்க்கத்தில். பொதுவாக கிறிஸ்துவை பிரசங்கம் செய்யுங்கள், ஆனால் சபையைக் குறித்து என்னை வருத்தப்படுத்தாதீர்கள்" என்று சொல்கிறார்கள்,

பழைய ஏற்பாடு முழுவதிலும் ஒரு ஆவிக்குரிய இராஜ்யத்தின் வருகையை குறித்து பெருமளவில் சொல்லப்பட்டிருக்கிறது. கடைசி நாட்களில் கர்த்தருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமென்று ஏசாயா முன்னுரைத்தார் (ஏசா.2:2-3). தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார் என்று தானியேல் சொன்னார் (தானி.2:44). அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் மாம்சமான யாவர் மேலும் ஊற்றப்படுவார் என்று யோவேல் சொன்னார் (யோவேல் 2:28-29). மிக முக்கியமான சம்பவங்களில் யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது என்பதை பேதுரு விளக்கியது அப்.2-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யோவான் ஸ்நானகன் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான் (மத்.3:1,2), மேலும் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று தம்மோடு நின்றவர்களிடம் கிறிஸ்து சொன்னார் (மாற்கு9;1). இறுதியாக கிறிஸ்து இந்த கல்லின்மேல் என்சபையைக் கட்டுவேன் என்று சொன்னார் - அவர் தேவனுடைய குமாரனாய் இருந்தார் என்பதே அந்த உண்மை (மத்.16:18-19; 1கொரி.3:11). பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை அப்போஸ்தலருக்கு கொடுப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்தார், புருஷரும், ஸ்திரீகளும் ராஜ்யமாகிய சபையினுள்ளே பிரவேசிப்பதற்கு அவர்கள் என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதை செய்ய, சொல்வதற்கான அதிகாரத்தை அப்போஸ்தலருக்கு கொடுத்தார்.

அப்.2-ம் அதிகாரத்தில் எருசலேமில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதை குறித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதை நாம் காண்கிறோம். பரிசுத்தாவியானவரின் வல்லமை அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்டதால், பரிசுத்தாவியானவர் அவர்களுக்கு பேச்சை கொடுத்ததினால் அவர்கள் அந்நிய பாஷையில் பேசத் தொடங்கினார்கள் அல்லது வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். இதுதான் சீக்கிரம் ஸ்தாபிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது என்று யோவான் சொன்ன ராஜ்யமாக இருந்தது. பின்னர் அப்போஸ்தலர்கள் முதல்முறையாக சுவிசேஷத்தை பிரசங்கித்து பாவம் நிறைந்த மனுஷர்கள் எப்படி இரட்சிப்படைய முடியும் என்பதை வெளிப்படுத்தி ராஜ்யத்தின் அல்லது சபையின் திறவுகோல்களைப் பயன்படுத்தினார்கள். அதைக் கேட்டவர்கள் விசுவாசித்து, தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுபின்பு இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர்தாமே சபையிலே சேர்த்தார். ஆகையால் தேவனுடைய வீடாக அல்லது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக இருக்கிற

(1தீமோ.3:15; 1கொரி.12:27) ராஜ்யமும், சபையும் ஒரே ஸ்தாபனமாக இருக்கிறது. பவுல் கொலோசேயிலிருந்த சபைக்கு தேவனை குறித்து, "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு உட்படுத்தினவர்" (கொலோ.1;13) என்று சொன்னார். எபிரெய நிருப எழுத்தாளர், "அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யக்கடவோம்" (எபி.12:28) என்று சொன்னார். இந்த வேளையில் அவர் எந்த ராஜ்யத்தை குறித்து பேசிக் கொண்டிருந்தார்? தேவனுடைய ராஜ்யமாகிய பரத்திலிருந்து வந்த ராஜ்யம், கர்த்தரால் இரட்சிக்கப்பட்டு அவருடைய சபையிலே சேர்க்கப்பட்டவர்களை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய தம்முடைய சரீரத்தின் அவயவங்களாக்குகிறார். மீண்டும் அது சபையாக இருக்கிறது (எபே.1:22,23; கொலோ.1;18).

இப்பொழுது கர்த்தருடைய மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலுக்கு பின்னேயுள்ள கிறிஸ்துவை குறித்த குறிப்பு சொல்லுகிறது, 'அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி **தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை** அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" (அப்.1:3). வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டும் என்றால், கிறிஸ்து சீக்கிரத்திலே எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட இருக்கிற தம்முடைய **ராஜ்யம் அல்லது சபையை** குறித்த முடிவான போதனைகளை தம்முடைய அப்போஸ்தலருக்கு கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் தொடர்ந்து, "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப்.1:8).

ஆகையால் அப்.2-ம் அதிகாரத்தில் ராஜ்யமாகிய கர்த்ததருடைய சபை ஸ்தாபிக்கப்பட்டது, அப்பொழுது 3000பேர் தேவனுக்குக் கீழ்ப்படிந்து சபையிலே சேர்க்கப்பட்டார்கள் (அப்.2;40). சுவிசேஷம் எருசலேம், யூதேயா ஆகிய இரண்டு இடங்களிலும் மீண்டும் மீண்டும் பிரசங்கிக்கப்பட்டது, ஆயிரம் பேருக்கு மேலானோர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து **அதே சபையிலே** சேர்க்கப்பட்டார்கள்.

ஆனால் இன்னும் அதிகமான காரியங்கள் உள்ளன. இந்த இடத்தில் குறிப்பு சொல்லுகிறது, "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவை குறித்துப் பிரசங்கித்தான்" (அப்.8:5). தொடர்ந்து நாம் "தேவனுடைய ராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்.8:12) எனக் காண்கிறோம்.

ஆகையால் நமக்கு என்ன இருக்கிறது? கர்த்தர் எவ்வாறு அப்போஸ்தலருக்கு **தேவனுடைய ராஜ்யத்தை** குறித்து போதித்தார் என்று நாம் காண்கிறோம், பின்னர் பிலிப்பு சமாரியர்களுக்கு கிறிஸ்துவை பிரசங்கித்தார். ஆனால் ஆச்சரியமான வகையில் அவரும் அவர்களுக்கு **தேவனுடைய ராஜ்யத்தை** குறித்து பிரசங்கித்தார்!



Yacheed ஒரே/ஒருவரே, இணைக்கப்பட்ட ஒன்று, தனித்த ஒன்று அல்ல.

**தேவனாகிய கர்த்தர்**

IV. எனவே ஏலோகிம், தேவன் என்பது ஒரு நித்திய ஆவியானவர் (துவக்கமும் முடிவும் இல்லாதவர்) எங்கும் வியாபித்திருப்பவர், எங்குமிருப்பவர், எல்லாவற்றையும் அறிந்த (Knowing everything) ஆவியானவர். ஆனால் இன்னொரு பாடத்தில் ஒரு ஆவியானவர் மூன்று நபராகவும், சமநிலையில் உள்ளவராகவும் இருக்கிறார் எனக் கற்றுக்கொள்ளலாம்.

1. ஆதியாகமம் 1:2ல், தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருக்கிறார் என வாசிக்கிறோம்.

2. யோவான் 1:1ல், "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது..."

3. ஏசாயா 63:1,9,10 "கர்த்தர்", அவருடைய சமூகத்தின் "தூதர்" மற்றும் "அவருடைய பரிசுத்த ஆவியானவர்" என அடையாளப்படுத்துகிறது - தேவத்துவத்தின் மூன்று நபர்கள், வல்லமையிலும் எல்லாவழியிலும் சமமானவர்கள்.

4. யாத்திராகமம் 23:20 மற்றும் 33:2-ல் கர்த்தராகிய தேவன் மோசேயிடம் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு வெளியேறியபோது அவர்களுடைய பயணத்தைக் குறித்துப் பேசுகையில் "...நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்" என்றார்; வசனம் 33:14ல் தூதன் "என் சமுகம்" என அடையாளப்படுத்தப்படுகிறார்; யாத்திராகமம் 13:21ல், பகலில் மேகஸ்தம்பத்திலும் இரவில் அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களோடு பயணம் செய்தவர் "கர்த்தர்" என அடையாளப்படுத்தப்படுகிறார்; யாத்.14:19ல் "தேவதூதன்" என அடையாளப்படுத்தப்படுகிறார். (எப்போதும் இவர் ஒரே ஒரு தூதராகக் கருதப்படுகிறார் ஒரு தூதனாக அல்ல மேலும் படைக்கப்பட்ட தூதர்கள் ஒருபோதும் ஒரே ஒரு தூதராகக் கருதப்படவில்லை) 1கொரிந்தியர் 10:4ல் இஸ்ரவேலோடு இருந்தவர் கிறிஸ்துவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

5. ஏசாயா 48:12, 13,16ல் நாம் இவ்வசனங்களை வாசிக்கலாம்

"யாக்கோபே, நான் அழைத்திருக்கிற இஸ்ரவேலே எனக்குச் செவி கொடு நான் அவரே, நான் முந்தினவரும், நான் பிந்தினவருமாமே".

வச 13. "என் கரமே பூமியை அஸ்திபாரப்படுத்தி, என் வலதுகை வானங்களை அளவிட்டது நான் அவைகளுக்குக் கட்டளையிட, அவைகள் அனைத்தும் நிற்கும்"

வச 16. "நீங்கள் என் சமீபத்தில் வந்து, நான் சொல்வதைக் கேளுங்கள் நான் ஆதிமுதற்கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை அது உண்டான காலந்துவக்கி அங்கே நான் இருந்தேன் அப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்"

இது வெளிப்படையாகவே "கர்த்தருடைய தூதன்" பேசுகின்றவராகிய "வார்த்தை" ஆக இருக்கிறார். ஆனால், அவர் இரண்டு நபர்களால் அனுப்பப்பட்டிருக்கிறார் என்று சொல்லுகிறதைக் கவனியுங்கள்: கர்த்தராகிய ஆண்டவர் மற்றும் அவருடைய ஆவி.

V. எனவே, ஆதிமுதலாக, ஏலோகிம் - கர்த்தராகிய தேவன், வார்த்தை மற்றும் பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றனர். பூமி ஒன்றுமில்லாதிருந்தது. அதன்பின்பு தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டிக்கத் தொடங்கினார், மேலும் அவருடைய சிருஷ்டிப்பின் கிரீடம் அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்ட மனிதவர்க்கமாக இருந்தது. இதன் அர்த்தம் என்ன? மனிதன் மட்டுமே அழிவில்லாத ஆவியும், ஒருபோதும் மரிக்காத ஆத்மாவும் பெற்றுக்கொண்டவனாய் இருந்தான். நாம் என்றும் நிலைத்திருப்பவர்கள் அல்ல, ஆனால் நாம் முடிவில்லாதவர்களாயிருக்கிறோம்.

**இந்தக் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள்:**

தேவத்துவம் மூலப்பொருட்களான உலகையும் உயிரினங்களையும் சிருஷ்டித்து வாழச்செய்துள்ளார். பின்பு, ஏனென்றால் அவர் அன்பாயிருக்கிறார், ஓர்

பெண்கள் பகுதி



# ஏலோகிம் - Elohim -Betty

**முன்னுரை:**

பண்டைய காலச்சாரங்களின் ஆன்மீக நூல் தொகுப்பு (சீனர், இந்தியர், ஜொராஸ்டியர், எகிப்தியர்) களில் தொடக்கத்தில் இருந்த நம்பிக்கையானது ஒரே தேவனில் மட்டுமே இருந்தது. காலப்போக்கில் மனிதனுடைய நினைவுகளால் காலமும் ஒழுக்க கேடான நடக்கையும் பல "கடவுள்கள்" மற்றும் சிலைவழிப்பாட்டு முறைமைகளும் சித்தரிக்கப்படுகின்றன. ஆனால் பண்டைய ஆன்மீக நூல்குறிப்புகளில்,

நாம் 1) ஒரே கடவுள்

2) கடவுளுக்கு பலி செலுத்தப்பட்டது, மேலும் இரண்டு நம்பிக்கைகளின் ஆதாரமாக

A) "நல்லது", " கெட்டது" என்ற ஒழுக்கம் சார்ந்த அறிவு, தேவனை விசனப்படுத்தியது

B) செய்த தவறுக்கு வருத்தம் தெரிவிக்க, மிருகபலி (இரத்தம் - காணிக்கையாக ) செலுத்தப்பட்டது.

3) ஆதிகாலத்திருந்து, மனிதர் தங்களுடைய மரித்தோரை உணவு, பிற்கால வாழ்வில் அவர்கள் பயன்படுத்துவதற்கான பொருட்கள் போன்றவற்றுடன், 'ஆத்துமா' வில் உள்ள தங்கள் நம்பிக்கையைக்' காண்பிக்கும் வண்ணம் அடக்கம் செய்தனர்,

இந்த அடிப்படை நம்பிக்கைகள் முழுவதும் கண்ணால் காணமுடியாதவைகள், இது ஏதோ ஒன்றிலிருந்து வரக்கூடியதாயிருக்கிறது என்ற அவர்களுடைய அறிவுக்கான ஆதாரம்: முதலாவது சிருஷ்டிக்கப்பட்டவர்களிலிருந்து (ஆதாம், ஏவாள்) அதன் பின் வெள்ளத்திற்குப் பின் உயிருடனிருப்பவர்களிலிருந்து (நோவா அவனது குடும்பம்).

I காணக்கூடாத ஒரே தேவனிடத்தில் உள்ள உலகளாவிய நம்பிக்கையோடு ஆரம்பிப்போம். கடவுள் யார்? சிலை வழிபாட்டினை புகுத்தின அந்த சீர்கெட்ட, முறையற்ற நடவடிக்கையை குறிப்பிட்டிருக்கிற நூல்குறிப்புகளையா அல்லது நமக்கு ஒரே தேவையைப் பற்றி கூறுகிற வேதாகமத்தையா பின்பற்றுகிறோம்?

II தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டது வேதாகமம் என்பதற்கான ஆதாரத்தை ஆதியாகமத்தை வாசித்து கண்டுகொள்வோம்.

அ) புறசமயசார்புடைய எகிப்தில் வளர்ந்த மோசே என்பவனால் இது எழுதப்பட்டது. இது தேவனாலே மாத்திரம் அவனுக்குச் சொல்லப்பட்ட தகவலோடு துவங்குகிறது:

A) ஆதியிலே பூமியெங்கும் இருள் இருந்தது என்று ஆதியாகமம் 1 கூறுகிறது.

B) தண்ணீர் (ஜலம்) எங்குமிருந்தது.

C) பின்பு தேவன் எல்லாவற்றையும் படைத்தார்.

3. ஆனால் யார் இந்த தேவன்? தேவன் என்பதற்கு எபிரெய வார்த்தை (ஒருமை, ஒன்று) ஏல் என்பதாகும்; பன்மையில் ஏலோகிம்.

பழைய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் ஏலோகிம் என வாசிக்கிறோம்:

1. 'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி.1:1)

2. "பின்பு தேவனாகிய கர்த்தர் சொன்னார்..." (1:26);

3. "பின்பு தேவனாகிய கர்த்தர் சொன்னார், "இதோ... **நம்மில்** ஒருவரைப்போல ஆனான்..." (3:22);

4. "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய **தேவனாகிய கர்த்தர்** ஒருவரே **கர்த்தர்**" (உபாகமம் 6:4) (கடவுள்) தேவன் என்பதற்கு எபிரெய வார்த்தை 'ஒன்று' என்பது (achid)



ஏன் ராஜ்யத்தை அல்லது சபையைக் குறித்த வலியுறுத்தல் இவ்வளவு அதிகமாக இருந்தது? ஏனென்றால் அது மனுக்குலத்திற்காக தேவன் கொண்டிருந்த முயற்சிகளின் உச்ச நிலையாக அது இருந்தது; தேவன் இந்த சமாதனத்தின் மூலமாக இரட்சிப்பை அளித்தார். இது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபடியே தேவனிடமிருந்து வந்தது, இரட்சிக்கப்பட்டவர்கள் சபையிலே சேர்க்கப்பட்டார்கள்! இதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி கூறமுடியாது.

ஆம், அடிக்கடி சபை முக்கியமானதல்ல என்றும், நாம் அதை குறித்து அதிகமாக பேச வேண்டாம் என்றும் மக்கள் கூறுவதை கேட்கிறோம். சபை என்பது இரட்சகர் அல்ல என்பது மெய்தான். இது இரட்சிக்கப்பட்டவர்களாகிய மனுஷரால் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்து சபைக்கு இரட்சகராக இருக்கிறார், அவர் சபைக்காக மரித்து அதை தம்முடைய சுய இரத்தத்தினால் விலைக்கு கிரயமாக வாங்கியிருக்கிறபடியால் நாம் இரட்சிக்கப்படவும், பரலோகத்திற்குச் செல்லவும் விரும்புவோமேயாகில் அவசியம் நாம் இதன் அங்கங்களாக இருக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டில் சபை அல்லது இராஜ்யத்தை குறித்து சொன்ன வேதவாக்கியங்கள் அனைத்தையும் நீங்கள் நீக்கி விடுவீர்களேயாகில், புதிய ஏற்பாட்டில் எவ்வளவு மீதியாயிருக்கும்?

எல்லாவற்றிற்கும் மேலாக சபையை கட்டி அதற்கு தலையாகவும், இரட்சகராகவும் கிறிஸ்து இருந்து அதன் அஸ்திபாரமாகவும் செயல்பட்டு, அதற்கு தம்முடைய பெயரையே இட்டு அழைப்பாரேயாகில், அதற்காகவே அவர் திரும்பவும் வந்து அதை தேவனிடத்தில் ஒப்புக்கொடுப்பாரேயாகில், யாராகிலும் ஒருவர் அது முக்கியமானது அல்ல என்று எவ்வாறு சிந்திக்க முடியும்? அதன் தெய்வீகமான தொடக்கத்தையும், அதன் நோக்கம், பணி மற்றும் தேவனுடைய ஒட்டு மொத்தமான திட்டத்தில் அதனுடைய மகத்தான ஸ்தானத்தின் முக்கியத்துவத்தையும் நாம் உலகத்துக்கு பிரசங்கியாவிட்டால் மனுஷர் எவ்வாறு அதைக்குறித்து அறிந்துகொள்வார்கள்?

முடிவாக நாம் சபையை பாராட்டி கர்த்தர் அதை அன்புகூருகிற விதமாகவே நாமும் அன்புகூர்ந்து அதன் அங்கங்களாயிருக்க நாம் நன்றியறிதல் உடையவர்களாயிருந்து வாஞ்சையோடே மற்றவர்களுக்கு அதைக்குறித்து சொல்லுவோமாக! அப்பொழுது அது உலகம் முழுவதும் பரவும். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லிய வண்ணம் "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்" (எபேசியர் 3:21)




**சந்தா செலுத்திவிட்டீர்களா?**

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

## வாசகர் கடிதங்கள் - Readers` Letters

Dear Brother in Christ,

தங்களின் பத்திரிக்கை ஆவிக்குரிய வளர்ச்சியைத் தருகிறது என்னுடைய முகவரிக்கு பத்திரிக்கை அனுப்புங்கள்.

**மேரி ஜெபராஜ்**
**மதுரை**

---

*கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கர்த்தரின் அன்பின் சமூகமும் ஆதரவும் உங்களோடிருப்பதாக. உங்களை கர்த்தரின் நாமத்தில் வாழ்த்துகின்றோம். வேதாகம ஆராய்ச்சி நேரம் மிகவும் நன்றாக அமைந்துள்ளது. சனிக்கிழமை 18.4.2020 8.00 மணியிலிருந்து 8.30 மணிவரை தாங்கள் எடுத்துக்கொண்ட பகுதி யாக்.1:2, யோபு 2:7, 1கொரி.10:13, தீத்.1:3, ஆதி.6:3, லூக்.21:17,19 எபி.2:18,4:15, யாக்.1:2–4 மிகவும் அழகாகவும் குறிப்புகள் எடுத்து கூறினீர்கள். தலைப்பு சோதனை* - Temptation *மாத பத்திரிக்கை மறக்காமல் அனுப்பிவைக்கவும்.*

Edwin Nelson Furtado,
Bangalore

---

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோ. அர்ஜுனன் அவர்களுக்கு, உங்களுக்காகவும் அன்பு குடும்பத்திற்காகவும் உங்கள் கைகளின் பிரயாசத்தின் சகல ஆசீர்வாதங்களுக்காகவும் கருத்தாய் ஜெபித்துள்ளேன். கர்த்தர் சீயோனிலிருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக! நீங்கள் ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக்காண்பீர்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியோடு இருப்பதாக. மேலும் தாங்கள் The Word of Christ புத்தகத்தை அனுப்பிவைக்க இதற்கு முன்பு எழுதியுள்ளேன் தயை கூர்ந்து ஒரு புத்தகத்தை அனுப்பிவைக்க வேண்டுகிறேன்

C.அருள்ராஜ்
சென்னை–28

### பொது அறிவு சோதனை

1. அதிகமான பரப்பளவு கொண்ட நாடு எது?
   அ) சீனா ஆ) ரஷ்யா இ) இந்தியா
2. கொரில்லாபோர் முறையை ஏற்படுத்தியவர்கள் யார்?
   அ) முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஆ) மராட்டிய ஆட்சியாளர்கள் இ) விஜயநகர ஆட்சியாளர்கள்
3. இஞ்சி எதனை குணப்படுத்த பயன்படுகிறது?
   அ) செரித்தல் ஆ) தலைவலி இ) மஞ்சட்காமாலை
4. நாகலாந்தின் ஆட்சி மொழி எது?
   அ) காசி ஆ) நாகா இ) அசாமிய மொழி
5. கடற்படைதினம் எந்த நாளில் அநுசரிக்கப்படுகிறது?
   அ) நவம்பர்28 ஆ) நவம்பர்4 இ) நவம்பர்6

**விடைகள்:**
1. ரஷ்யா
2. மராட்டிய ஆட்சியாளர்கள்
3. செரித்தல்
4. அசாமிய மொழி
5. நவம்பர்4

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



பயன்படுத்துவதாக இருக்கிறது. எப்பொழுதுமே ஒரு "அழைக்கப்பட்ட மக்களின் கூட்டம் என்ற அர்த்தம் ஆகிறது. இந்த நான்கு பயன்பாடுகளும் நாம் மேலும் சபையின் ஆளுகையை குறித்து கற்றுக்கொள்ளுகிறபடியால் நாம் தயவு செய்து நினைவில் கொள்ள வேண்டியவைகளாயிருக்கின்றன. மேலும் நாம் எப்பொழுதுமே வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேசுவோம், வேதாகமம் எங்கே அமைதியாய் இருக்கிறதோ அங்கே நாமும அமைதியாயிருப்போம். வேதாகமம் சபையைக் குறித்து பேசுகிறபடியே நாம் பேசுவோமேயாகில் அதிகமான குழப்பங்களைத் தவிர்க்க முடியும். வேதாகமத்தில் காணப்படாத சபைகளைக் குறித்த கருத்துக்களை நாம் விட்டு விடக்கடவோம்.

### கேள்விகள்

1. சபை என்பது எப்பொழுதுமே ஒரு ------ ---------- ----------- குறிப்பிடுகிறது.
2. வனாந்தரத்திலிருந்து அழைக்கப்பட்ட சபை எதிலிருந்து அழைக்கப்பட்டதாயிருந்தது? ------------- --------------.
3. வனாந்தரத்திலிருந்த சபையானது, கிறிஸ்துவின் சபையைப் போலவே இருந்ததா? --------------.
4. நாமகரண கூட்டங்கள் கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட்டனவா? ----------------
5. யோவான் 17:21 -------------- ஒன்றாயிருக்கிறதுபோல --------- ------------- ------------- ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்று சொல்கிறது.
6. உங்களுக்குள்ளே ------------- இல்லாமல் இருக்க வேண்டும் என்று 1கொரி.1:10 போதிக்கிறது.
7. 2கொரி.6:17 "நீங்கள் ----- ------- என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று சொல்கிறது.
8. 1கொரி.1:2----------- இருந்த தேவனுடைய சபையைக் குறித்து பேசுகிறது.
9. எந்த சபையிலே ஸ்திரீகள் அமைதியாய் இருக்க வேண்டும்? -------.
10. முழு சபையும் கிறிஸ்துவின் ----------- என்று அழைக்கப்படுகிறது.

3. ஒரு உள்ளூர் சபை. புதிய ஏற்பாடு "சபை" என்ற பதத்தை ஒரு உள்ளூரிலும் உள்ள கிறிஸ்தவர்களின் கூட்டத்தை குறிப்பிட "சபை" என்ற பதத்தை பயன்படுத்துகிறது. இது ஒரு கிராமம் அல்லது பட்டணத்தில் இருந்து அழைக்கப்பட்ட மக்களின் கூட்டம். நாம் கொரிந்துவில் இருந்த "தேவனுடைய சபையைக்" குறித்து வாசிக்கிறோம். நாம் காண்கிற ஆசியாவில் இருந்த ஏழு சபைகள் ஏழு ஆசிய பட்டணங்களில் இருந்த ஏழு பிராந்திரிய சபைகள் (உள்ளூர் சபைகள்) ஆக இருக்கின்றன (வெளி.1:11). பவுல் பிராந்திய சபைகளிலிருந்து வாழ்த்துக்களை அனுப்பும் பொழுது "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று சொல்கிறார் (ரோம.16:16). எந்த ஒரு இடத்திலும் அழைக்கப்பட்ட ஒரு விசுவாசிகளின் கூட்டம் ஒரு உள்ளூர் சபை "பிராந்திய சபை" என்று அழைக்கப்படுகிறது.

### ஜெபியுங்கள்

- நமது புதிய வெளியீடுகளுக்காக...
- ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்ப...
- ஒவ்வொருவரும் இயேசுவை அணிந்துகொள்ள...



தொடங்கப்பட்டிருக்கின்றன. பிரிவினை சபைகளின் பிரிவுகள் எல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்ற வேதாகம போதனைக்கு எதிரிடையாக மனுஷரால் தொடங்கப்படுகின்றன (யோவா.17:20,21) இந்த பிரிவினைகள் கிறிஸ்துவின் போதனைக்கு பதிலாக, தங்களுடைய போதகர்களின் போதனையைப் பின்பற்றும்படி இந்த பிரிவினைகள் முதலாவது எழும்பத் தொடங்கின. (இவர்கள் அந்த போதகர்களின் நாமத்தை தரித்துக் கொண்டார்கள்) (1கொரி.1:10-13). ஆகையால் வேதாகமத்தில் எப்போதுமே அழைக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டமாக இருந்தார்கள் அது எப்பொழுதுமே ஒரு கட்டிடமாகவோ அல்லது ஒரு நாமகரண (பிரிவினை) கூட்டமாகவோ இருக்கவில்லை. வனாந்தரத்தில் இருந்த சபையானது யூத மக்களின் பழைய ஏற்பாட்டுக்கான அழைக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டமாக இருந்தது.

2. முழு சபை அல்லது கிறிஸ்துவின் சரீரம் நாம் புதிய ஏற்பாட்டுக்கு திரும்பும் பொழுது நாம் கிறிஸ்துவின் சபையை குறித்து கற்றுக்கொள்கிறோம். இயேசு சொன்னார், “நான் என் சபையைக் கட்டுவேன்” என்று (மத்.16:18). வேதாகமம் சொல்கிறது இந்த சபை கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலைக் கிரயமாக வாங்கப்பட்டது என்று (அப்.20:28). அவர் அதில் அன்பு கூர்ந்து அதற்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் (எபே.5:25). இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் கர்த்தரால் இந்த சபையிலே கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள் (அப்.2:47). இது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்று அழைக்கப்படுகிறது, அவரே இதற்கு தலையாயிருக்கிறார் (கொலோ.1:18,24). சகல கிறிஸ்தவர்களாலும் உருவாக்கப்பட்ட இந்த கூட்டமானது மெய்யாகவே ஒரு “அழைக்கப்பட்ட கூட்டமாக இருக்கிறது. அவர்கள் இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலை ஆக்கப்பட்டு கிறிஸ்துவின் இராஜ்யத்துக்குள் உட்படுத்தப்பட்டவர்களாயிருக்கிறார்கள் (கொலோ.1:13). அவர்கள் உலகத்துக் குரியவைகளில் இருந்து வெளியேறி தங்களை ஒரு தனிப்பட்ட ஜனங்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் (2கொரி.6:17). இந்த அழைக்கப்பட்ட கூட்டத்தை வேதாகமம் முழு சபை அல்லது கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கிறது.

4. ஒரு சங்கம் நான்காவது வகையாக வேதாகமம் “சபை” என்ற பதத்தை பேச முற்படும் பொழுது ஒரு “சங்கம் அல்லது குழு” என்று பேசுகிறது. ஒரு சங்கத்துக்குள்ளாக பிரவேசிக்க ஜனங்கள் தங்கள் வீடுகளிலிருந்து அழைக்கப் படும்போது அவர்கள் ஒரு “சபை” என்று அழைக்கப்படுகிறார்கள். சபையானது எப்பொழுதுமே “அழைக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தைக் குறிப்பிடுகிறது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். பவுல் கூடிவந்த “சபையை” குறித்து 1கொரி.14:23ல் பேசுகிறார். ஸ்திரீகள் “சபைகளில்” (சங்கங்களில்) அமைதியாய் இருக்க வேண்டுமென்று சொல்கிறார். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்கும் வச.34-35. சங்கம் என்பது அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் ஒரு கூட்டமாக ஒரு கூட்டத்திற்குள்ளாக ஒன்று கூடி வந்திருக் கிறவர்களாக இருக்கிறார்கள்.

இவைகள் வேதாகமம் “சபை” என்ற பதத்தை நான்கு வழிகளில்



## இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்

Pray Without Ceasing –ஆசிரியர்



கொரோனா காலத்தில் நீங்கள் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். அது உங்களை நீங்களே பாதுகாத்துக்கொள்ள உதவியாக இருக்கும்.

**1. பரலோக பிதாவை நோக்கி ஜெபம்பண்ணுங்கள்.** நீங்கள் விண்ணப்பம்பண்ணும்போது பரலோக பிதாவை நோக்கி வேண்டுகிறீர்களா? நம் ஆண்டவராகிய இயேசு: "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" என்றார் (மத்.6:6). நம்முடைய தேவன் அந்தரங்கத்திலிருக்கிற பிதாவாக இருக்கிறார். அவர் இருக்கிற இடத்தை நாம் அறியோம். ஆனால் அவர் அங்கிருந்து நம்முடைய வேண்டுதலை கேட்கிறார் என்ற நம்பிக்கை நமக்குள் இருக்கவேண்டும். மேலும் தம்முடைய சீஷர்களுக்கு ஜெபம்பண்ண கற்றுக்கொடுத்த ஜெபத்தில் உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப் படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக... என்றார் (மத்.6:9-13). அப்படியானால் பூமியிலே வாழுகிற நாம் அவருடைய சித்தத்தின்படி செய்கிறோமா?

**2. அவருடைய சித்தத்தின்படி ஜெபியுங்கள்.** நமக்கு அநேக விருப்பங்கள் இருக்கலாம். அதுவெல்லாம் தேவனுடைய சித்தமாகிவிடாது. "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1யோவா.5:14,15). அவருடைய சித்தத்தின்படி ஜெபிக்கும்போது நாம் அவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்துகொள்ளவேண்டும். இந்த நம்பிக்கை உங்களுக்குள்ளாகயிருக்கிறதா? ஆண்டவர் இயேசு சிலுவை பாடுகளுக்கு முன்பு ஜெபித்தபோது; "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்" (லூக்.22:42). நாம் அநேக வேளையில் ஜெபித்து ஜெபித்து பதில் வரவில்லை, என்ஜெபத்தை கர்த்தர் ஏற்றுக்கொள்ள வில்லை என சலித்துக்கொள்ளுகிறோம். பிதாவுக்கு ஒரேபேறான குமாரனுடைய ஜெபத்தை கவனித்தீர்களா என்னுடைய சித்தத்தின்படியல்ல என்று ஜெபித்தார். முழுவதும் பிதாவினிடத்தில் தன்னை அர்ப்பணித்தார். அதைப்போல உங்களை ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள்.

**3. சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபியுங்கள்.** சோதனை ஒவ்வொரு நாளும் பல வழிகளில் வருகிறது. பிசாசு எவனை விழுங்கலாமோவென்று சுற்றித்திரிகிறான். நாம் ஜெபிக்க கடந்து செல்லும்போது பலவிதமான தடைகள் ஏற்படுகிறது. ஆண்டவர் இயேசுவோடு சீஷர்கள் ஜெபிக்கும்படியாக சென்றபோது அவர் சற்று கல்லெறிதூரம் சென்று தனிமையாக ஜெபித்தார். அவர்களோ நித்திரை பண்ணிக்கொண்டிருந்தார்கள். "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்த ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்து என்றார்" (மாற்.14:38). ஜெபிக்க கடந்து செல்லும்போது வருகிற சோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.


**4. பயப்படாமல் விசுவாசமுள்ளவர்களாகயிருந்து ஜெபியுங்கள்.** நாம் வேண்டிக்கொண்ட பின்பு தடையாக இருப்பது பயம் அல்லது அவிசுவாசம். இவைகளே நாம் பிதாவினிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள இருக்கும் ஆசீர்வாதத்திற்கு தடையாக இருக்கும். ஜெபஆலயத்தலைவன் யவீருவைப் பற்றி லூக்.8:41-56 வசனங்களில் படிக்கிறோம். அவன் இயேசுவின் பாதத்தில் விழுந்து பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்தபடியால், தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக்கொண்டான். அவர் போகையில் நடந்தது என்ன? ஒரு பெண் பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ளவாயிருந்து தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும் ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த அந்த பெண் இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு சுகமானாள். இதனால் யவீரு வீட்டுக்குப்போவதில் தாமதமானது. ஜெப ஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து, யவீருவை நோக்கி: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வரத்தப்படுத்த வேண்டாம் என்றான். இதைக்கேட்ட அவனுக்கு எப்படியிருந்திருக்கும்! இயேசு யவீருவை நோக்கி: பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு அப்பொழுது அவள் இரட்சிக்கப் படுவாள் என்றார். இவ்வார்த்தை நமக்கும் பொருத்தமானதாயிருக்கிறது. நாமும் பயப்படாமல் விசுவாசத்துடன் இருப்போம்.

**5. துன்பப்பட்டால் ஜெபம்பண்ணுங்கள்.** துன்பப்பட்டால் துக்கம் அதிகரிக்கும் பின்பு எப்படி ஜெபிப்பது என்கிறீர்களா? "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்" என வாசிக்கிறோம் (யாக்.5:13). துன்பத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவே விரும்புகிறோம். நாம் பரமவைத்தியரிடம் அவைகளைச் சொல்லுவோமானால் துன்பத்திலிருந்து நமக்கு அவர் விடுதலையைக் கொடுப்பார். நம் தேவன் நமக்கு ஒரு காயம் ஏற்பட்டுவிட்டால் அதை சரிசெய்யக்கூடிய மருந்தை நமது சரீரத்திலே வைத்திருக்கிறார். நாம் போடுகிற மருந்தெல்லாம் அதற்கு நிகரானது அல்ல. எனவே துன்பம் வரும்போது அதிலிருந்து மீண்டுவர மற்றவர்களை நாடாமல் தேவனை நோக்கி ஜெபியுங்கள். சந்தோஷத்தில் இருதயத்திலிருந்து பாடுங்கள்.

**6. நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபம் மிகவும் பெலனுள்ளது.** இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்கள் யாவரும் நீதிமான்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய ஜெபத்திற்கு தேவனுடைய செவிகள் திறந்தே இருக்கின்றன. "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள், நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்.5:16). நம்முடைய ஜெபத்திற்கெல்லாம் பதில் கிடைக்குமா? என்ற சந்தேகத் தோடே ஜெபிக்காமல் நம்மைப்போல பாடுள்ள மனிதனாகிய எலியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுத்த தேவன் நமக்கும் பதில் கொடுப்பார் என்று ஊக்கமாக ஜெபியுங்கள்.

**7. ஜெபத்தின் மூலம் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.** "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப் பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி.4:6). தேவன் ஒவ்வொரு நாளும் நம்முடைய ஜெபத்தை எதிர்நோக்கியிருக்கிறார். பெற்றோர்கள் பிள்ளைகளுடைய தேவைகளுக்கு செவிகொடுப்பதைப்போல அவரைநோக்கி கூப்பிடுகிறவர்களுடைய சத்தம் கேட்கிறார். எனவே எல்லாவற்றையுங்குறித்து பிதாவாகிய தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். ஒருநாளைக்கு குறைந்த பட்சம்ஏழு முறையாவது தேவனை நோக்கி ஜெபியுங்கள். நீங்கள் அவரால் அற்புதமாக வழி நடத்தப்படுவீர்கள்.






## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

– *மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -4**

**சபை என்பது என்ன?**

1. வனாந்தரத்திலிருந்து சபை
2. முழு சபை அல்லது கிறிஸ்துவின் சரீரம்
3. ஒரு பிராந்திய சபை
4. ஒரு கூட்டம்

**கலந்துரையாடல்**

1. வனாந்திரத்திலிருந்த சபை. “சபை” என்ற வார்த்தை “அழைக்கப்பட்ட மக்களின் ஒரு கூட்டத்தை குறிப்பிடுகிறது. இது ஒரு கட்டிடத்தைக் குறிப்பிடவில்லை. தர்சு பட்டணத்தானாகிய சவுல் “புருஷரையும், ஸ்திரீகளையும்” (அப்.8:1-3) துன்பப்படுத்துகிறதினாலே சபையை துன்புறுத்திக் கொண்டிருந்தான். சபை அங்கத்தினர்கள் சபையாய் இருக்கிறார்கள். ஆனால் எல்லா புருஷரும், ஸ்திரீகளும் சபையார் அல்ல, யார் “ அழைக்கப்பட்ட மக்களாயிருக் கிறார்களோ” அவர்கள் மட்டுமே சபையாராய் இருக்கிறார்கள். வேதாகமம் “சபை” என்ற பதத்தை பயன்படுத்தும் பொழுது, அது அழைக்கப்பட்ட ஜனங்களின் ஒரு கூட்டத்தையே எப்பொழுதும் குறிப்பிடுகிறது. எகிப்திலிருந்து வனாந்தரத்திற் குள்ளாக அழைக்கப்பட்டிருந்த இஸ்ரவேலரைக் குறித்து ஸ்தேவான் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். இந்த ஜனங்கள் அடிமைத்தனத்திலிருந்தும், சிறையிருப்பிலிருந்தும் அழைக்கப்பட்டவர்களாயிருந்தார்கள், எனவே அவர் அவர்களை “வனாந்தரத்திலிருந்த சபை” என்று அழைத்தார் (அப்.7:38). இது “சபை” என்ற பதத்தின் உண்மையான பொருளை நாம் காண நமக்கு உதவியாக இருக்கிறது. உண்மையிலேயே அழைக்கப்பட்ட இந்த கூட்டமானது புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவின் சபையாக இருக்கவில்லை. அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்து சென்ற பொழுது மேகத்தின் கீழாக எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள் (1கொரி.10:1,2). இயேசு கட்டிய சபையானது, அவர் பூமிக்கு வந்த பின்பு பரலோகத்திற்கு திரும்பிச் செல்லும் வரை வரவில்லை (மத்.16:18). பழைய ஏற்பாட்டின் மார்க்கம் யூதருடைய மார்க்கமாக இருந்தது (கலாத்.1:13,14). அது கிறிஸ்தவமார்க்கமாக இருக்க வில்லை, ஆனால் கிறிஸ்தவத்திற்கு அது ஒரு முன்னோட்டமாக இருந்தது (கலா.3:24,25).

இதற்கும் மேலாக வேதாகமம் பேசுகின்ற சபையானது ஒரு பிரிவினை சபை கூட்டமல்ல. புதிய ஏற்பாட்டு சபையின் காலத்தில் பிரிவினை சபைகள் இல்லாதிருந்தன. எல்லா பிரிவினை சபைகளும் இயேசுவானவர் தம்முடைய சபையை கட்டிய காலத்திலிருந்தே, ஏதோ சில சமயங்களில்